# குடும்ப அட்டைக்கு சரியாக உணவுப் பொருள் பெற

**(பதிவு அஞ்சல் ஒப்புதல் அட்டையுடன்)**

அனுப்புநர் நாள்: . . . . . . .

**(பெயர் முகவரி)**

பெறுநர்

பொது தகவல் அதிகாரி,
வட்டார உணவுப் பொருள் வழங்கல் அதிகாரி அலுவலகம்,
. . . . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . .

பொருள்: தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005- உணவுப் பொருள் விநியோகம் தொடர்பாக தகவல்கள் கோருதல் - தொடர்பாக.

- - - - -

தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005, பிரிவு 6(3)-ன் கீழ் நான் கீழே கேட்டுள்ள தகவல்களை வழங்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

1. அ) . . . . . . . . . . . . இடத்தில் உள்ள (கடை எண் மற்றும் அது இயங்கும் முகவரி எழுதவும்) ரேசன் கடைக்கு எத்தனை பணியாளர், என்னென்ன பதவிப் பெயர்களில் பணியமர்த்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது? ஆ) அதில் கடந்த ஓராண்டில் எத்தனை பேர், எத்தனை மாதங்கள் பணியமர்த்தப்படாமல் அல்லது விடுப்பினால், அந்த பணியிடம் கா-யாக இருந்துள்ளது? இ) மேற்படி கடையில் தினக்கூ-கள் எத்தனை பேர் எத்தனை மாதங்களுக்கு அல்லது எத்தனை நாட்களுக்கு நியமனம் செய்யப்பட்டு பணி செய்துள்ளனர்?

2. அ) பொருட்கள் பெற்றுக் கொள்ள தகுதி உடைய குடும்ப அட்டை தாரர்கள் எத்தனை பேர் உள்ளனர்?

ஆ) அவர்களின் அட்டை எண்கள் மற்றும் பெயர் முகவரி பதிவு செய்யப்பட்டுள்ள பதிவேட்டின் (A Register) நகல் ஒன்று வழங்கவும்.

இ) இதில் சர்க்கரை மட்டும் பெற்றுக்கொள்ள தகுதி உடையவர்கள் எத்தனை பேர்? அந்த அட்டைகளின் எண்கள் மற்றும் பெயர் முகவரி வழங்கவும்.

3. கடந்த ஓராண்டுக்கு உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ள பதிவேட்டின் (Distribution Register) நகல் ஒன்று வழங்கவும்.

4. கடந்த ஓராண்டுக்கு உணவுப் பொருள் சேமிப்புப் பதிவேட்டின் (Stock Register) நகல் ஒன்று வழங்கவும்.

5. கடந்த ஓராண்டில் சக்கரை வாங்காத அட்டைதாரர்கள் எத்தனைபேர்? எந்தெந்த மாதங்களுக்கு வாங்கவில்லை. அவர்களின் அட்டை எண்கள் மற்றும் பெயர் முகவரி வழங்கவும்.

6. அ) கடந்த ஓராண்டில் இலவச அரிசி வாங்காத அட்டைதாரர்கள் எத்தனைபேர்? ஆ) எந்தெந்த மாதங்களுக்கு வாங்கவில்லை. இ) அவர்களின் அட்டை எண்கள் மற்றும் பெயர் முகவரி வழங்கவும்.

7. உணவுப் பொருட்கள் வழங்கும்போது, அதனுடன் சேர்த்து இன்னென்ன பொருட்கள் வாங்க வேண்டும் என்று அட்டை தாரர்களை நிர்பந்திக்கும் விதத்தில், ஏதாவது தங்கள் துறை உத்தரவுகள் வந்துள்ளதா? ஆம் எனில் அதன் ஒளி நகல் வழங்கவும்.

8. அரிசி, எண்ணெய் வகைகள், சர்க்கரை போன்ற பொருட்கள் வாங்கும்போது, இன்னென்ன பொருள் வேண்டும் என்றால் இன்னென்ன பொருட்கள் வாங்க வேண்டும் என கடந்த ஓராண்டில் அட்டைதாரரகளை நிர்பந்தப்படுத்தி விற்பனை செய்த பொருட்கள் என்னென்ன?

9. அ) மேற்படி கடையில் தரச்சான்றிதழ் பெற்று விற்கப்பட்ட பொருட்கள் என்னென்ன? தரச்சான்றில்லாமல் விற்கப்பட்ட பொருட்கள் என்னென்ன? ஆ) தரச்சான்றிதழ் பெற வேண்டியது தொடர்பான விவரங்கள் அடங்கிய அரசு உத்தரவின் அல்லது அரசு ஆணையின் ஒளி நகல் வழங்கவும். இ) தரமற்ற உணவுப் பொருட்கள் எந்தெந்த மாதத்தில் விநியோகம் செய்யப்பட்டது? அதற்குக் காரணம் என்ன?

10. அ) பொருள்கள் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கும் போது என்னென்ன பொருட்களில் எவ்வளவு எடைவரை குறைத்து சாதாரணமாக விற்பனை செய்யப்படுகிறது? ஆ) எவ்வளவு எடை அதிகபட்சம் குறைத்து விற்பனை செய்யலாம் என தங்கள் துறையில் வழிகாட்டுதல்கள் உள்ளனவா? ஆம் எனில் அதன் ஒளி நகல் ஒன்று வழங்கவும்.

11. அ) மேற்படி கடை பணியாளர்கள், உணவுப் பொருள்களை சேமிப்புக் கிடங்குகளில் இருந்து எடுக்கும் போது எடை குறைவாக எடுத்து வரப்படுகிறதா? ஆ) ஆம் எனில், எவ்வளவு எடை குறைவாக எடுத்துவர தங்கள் துறை அனுமதி வழங்கியுள்ளது? அது தொடர்பான உத்தரவின் நகல் வழங்கவும்.

12. மூட்டைகளை ஏற்றுவது, இறக்குவது உட்பட இதர செலவினங்களுக்காக, மேற்படி கடை பணியாளர்கள், எவ்வளவு ரூபாய் வரை ஒவ்வொரு மாதமும் செலவு செய்ய வேண்டி வரும் என்ற விவரங்களை வழங்குக.

13. அ) மேற்படி கடையில் பணியாளர்கள் அல்லாத வெளி நபர் எத்தனை பேர் பணிபுரிகின்றார்கள்? ஆ) அவர்கள் ஊதியம் பெறாமல் பணிபுரிகின்றவர்களா? இ) இல்லை எனில், ஊதியம் எவ்வாறு, எந்த பணத்தில் வழங்கப்படுகிறது?

14. கடந்த ஓராண்டில், ஒவ்வொரு மாதத்திலும் அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய், சமையல் எண்ணெய் வாங்காத அட்டைதாரர்கள் எத்தனை பேர்? அவர்களின் அட்டை எண்களுடன் ஒவ்வொரு மாதத்திற்கும், ஒவ்வொரு பொருளுக்கும் தனித்தனியாக விவரங்கள் வழங்கவும்.

15. அ) எவ்வளவு எடை சாதாரணமாக உணவுப் பொருள் சேமிப்புக் கிடங்குகளில் இருந்து மேற்படி கடைக்கு எடுத்து வரும் போது எடை குறைவாக எடுத்து வரவேண்டிய சூழ்நிலை உள்ளது? ஒவ்வொரு பொருளுக்கும் தனித்தனியாக வழங்கவும். ஆ) இது பதிவு செய்யப்பட்டுள்ள பதிவேட்டின் நகல் வழங்கவும்.

16. மேற்கண்ட ஆவணங்களை, பதிவேடுகளை நான் பார்வையிடவும், தேவையான சான்று அளிக்கப்பட்ட நகல் பெற்றுக் கொள்ளவும் நேரம் நாள் ஒதுக்கி எனக்குத் தெரிவிக்கவும்.

17. தங்கள் பதில் எனக்கு திருப்தி அளிக்காவிட்டால் நான் யாருக்கு, எந்த முகவரியில், மேல்முறையீடு செய்ய வேண்டும்?

18. நான் கேட்டுள்ள ஆவணங்களைப் பெற, எப்படி, யாரிடம், எந்த இடத்தில் பணம் செலுத்த வேண்டும் என்ற தகவலை வழங்கவும்.

மேற்கண்ட தகவல்களைப் பெற இத்துடன் ரூ.10-க்கு நீதிமன்ற வில்லை ஒட்டியுள்ளேன்.

இப்படிக்கு,

**(மனுதாரர் பெயர் மற்றும் ஒப்பம்)**